முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

O.S No. 104/2018

2022 ம் ஆண்டு ஜூன் மாதம்10 ம் நாள் வெள்ளிக்கிழமை கீழ்க்கண்ட சாட்சியின் வாக்குமூலம் (1965 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணக்குமார் Bench Clerk Gr.I அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகானந்தம் | தொழில் | : | |
| த/பெ. | : | | வட்டம் | : | |
| வயது | : | | கிராமம் | : | |
| ஜாதி | : | | மதம் | : | |

வா.சா.1

**முதல் விசாரணை** :

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலம் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தை நான் படித்துப்பார்த்துத்தான் கையெழுத்துப் போட்டேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள்தான். நான் பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்த பின்வரும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

1) 14.06.2018 ம் தேதியிட்ட கடனுறுதிச்சீட்டின் அசல் வா.சா.ஆ.1.

2) 17.03.2019 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2.

3) 19.03.2018 ம் தேதியிட்ட ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ.3.

4) சட்ட அறிவிப்பானது பிரதிவாதிகளுக்கு டெலிவரி செய்யப்பட்டுவிட்டது என்ற தபால் துறையின் சான்றிதழின் அசல் வா.சா.ஆ.4.

5) 27.03.2018 ம் தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.5.

WEB COPY

6) 11.09.1998 ம் தேதியிட்ட முதலாம் பிரதிவாதிக்கு லோகநாதன் செய்து கொடுத்த சுத்த கிரைய சாசனத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6.

7) 28.06.2018 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதிக்கு முதலாம் பிரதிவாதி செய்து கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7.

8) 06.04.2018 ம் தேதியிட்ட திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தால் அளிக்கப்பட்ட வில்லங்க சான்று அசல் வா.சா.ஆ.8.

மேலே கூறியுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என் வயது என்ன என்று தெரிவிக்கப்படாமல் வெற்றிடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் . எனது பிரமாண வாக்குமூலத்தில் புதிய கதவு எண் .3/1173 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் . நான் பிரதான மாநில கட்சியில் உறுப்பினராக உள்ளேன். அது திராவிட முன்னேற்ற கழகம் ஆகும். அந்த கட்சியில் நான் எந்த பொறுப்பும் வகிக்கவில்லை . நான் பொது பயன்பாட்டுக்கான வாகனங்களை வாடகைக்கு விட்டு வருகிறேன் . அந்த டிராவல்ஸ் பெயர் தமிழ் டிராவல்ஸ் ஆகும். எனது டிராவல்ஸில் ஆறு வண்டிகள் வைத்துள்ளேன். அதில் இரண்டு வண்டிகள் எனக்கு சொந்தமானது ஆகும் . மற்றொரு வாகனம் எனது தம்பி கோபிக்கு சொந்தமானதாகும். இதுதவிர வேறு இதர வருமானங்கள் உண்டு. நான் நான்கு சக்கர வாகனங்கள் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 எனக்கு அனுப்பப்பட்டதா என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளது . அதனால் என்னால் கூற இயலாது. எனக்கு இந்த தாவா சம்மந்தமாக பிரதிவாதியிடமிருந்து பதில் அறிவிப்பு எனது முகவரிக்கு எனக்கு சார்வானதா என்று கேட்டால் அவ்வாறு எந்த பதில் அறிவிப்பும் எனக்கு சார்வாகவில்லை. எனக்கு நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பது தெரியுமா என்றால்

WEB COPY

தெரியும். இந்த வழக்கின் முதலாம் பிரதிவாதிக்கும் எனக்கும் எத்தனை வயது வித்தியாசம் என்றால் 1ம் பிரதிவாதிக்கு 50 வயது இருக்கும். எனக்கு வயது 42 ஆகும். எனக்கு ஓட்டுநர் உரிமம் உண்டு . நானும் எனது டிராவல்ஸில் உள்ள வாகனத்தை ஓட்டிச்செல்வேன். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எப்படி பழக்கம் என்று கேட்டால் நான் பிளச்இஎல்லில் சவாரிக்கு செல்லும்போது 2009ம் ஆண்டு முதல் பழக்கம் . 1ம் பிரதிவாதியின் பூர்வீகம் துவாக்குடி ஆகும் . என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது பி.வா.சா.ஆ.1. மேற்படி அஞ்சல் ஒப்புகை அட்டை பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்குண்டான ஒப்புகை அட்டை என்றால் அதுபற்றி ஞாபகமில்லை என்று சாட்சி கூறுகிறார் . பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதில் உள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டு உள்ளேன் என்றாலும் , தற்போது அதை மறைத்து பதில் அறிவிப்பை பெறவில்லை என்றும் ஞாபகமில்லை என்றும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது டிராவல்ஸில் எனக்கு சொந்தமான மூன்று வாகனங்களான வாகன பதிவு எண்கள் TN45AX0266, TN45AB4666, TN57BB6987 ஆகும். சாதாரணமாக நாம் எங்கு குடியிருந்து வருகிறோமா அந்த ஆளுகைக்குட்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில்தான் வாகனத்தை பதிவு செய்ய இயலும் என்று சொன்னால் சரிதான் . நான் வருமான வரி கணக்கு வைத்துள்ளேன் . அந்த நிரந்தர கணக்கு எண்ணை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தமுடியுமா என்றால் எனது வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்கிறேன் . தோராயமாக எனது மாத வருமானம் ரூபாய் நான்கு லட்சம் இருக்கும் . சில சமயம் அதற்கு குறைவாகவும் காணப்படும், அதிகமாகவும் காணப்படும் . இந்த வழக்கில் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது . பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியாது. எனது பிரமாண

W E B C O P Y

WEB COPY

வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுதான் எனது நிரந்தர முகவரி ஆகும் . எனது வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பில் எனது கதவு எண் .3/301 என்று மட்டும்தான் தெரிவிக்கப்பட்டுள்ளது . பிராதில் எனது முகவரியில் கதவு எண்ணாக 3/1 பழைய எண் என்றும் , 3/301 புதிய எண் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் முதலாவது பிரதிவாதி மீது திருவெறும்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் . அந்த புகாரை காண்பித்தால் எனக்கு தெரியும் . என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் . சாட்சி புகாரை படித்துப்பார்த்துவிட்டு தான் கொடுத்த புகார்தான் என்று கூறுகிறார் . அந்த புகார் ஆவணம் பி.வா.சா.ஆ.2. மேற்படி புகாரில் எனக்கும் ஜெயபாலுக்கும் பணம் கொடுக்க வேண்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் ஸ்ரீரங்கம், சித்திரைவீதியைச் சேர்ந்த ஜெயபால் என்பவர்தான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார். நான் கொடுத்த புகார் சம்மந்தமாக திருவெறும்பூர் காவல் நிலையத்திற்கு நான் சென்றேன் . 1ம் பிரதிவாதியும் வந்தார் . அந்த காவல்நிலையத்தில் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை. விசாரணை மட்டும் செய்தார்கள் . புகார் 1ம் பிரதிவாதி மற்றும் ஒருவர் மீது மட்டும்தான் கொடுத்துள்ளேன் . 2ம் பிரதிவாதி மீது கொடுக்கவில்லை. விசாரணையின்போது 1ம் பிரதிவாதியின் வீட்டுப்பத்திரத்தை எடுத்து வரச்சொன்னார்கள். அவர் வீட்டுப்பத்திரத்தை எடுத்துவந்தார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/. K. Babu, 10.06.2022,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.